TAMIL NADU ... 25 NOV 1982 MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
புதன்கிழமை, 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் 7
பங்குனி 25, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து''

பணிவுடையவராக ஒழுகுதல் பொதுவாக எல்லோர்க்கும் நல்லதாகும். அவர்களுள் சிறப்பாக செல்வர்க்கே மற்றொரு செல்வம் போன்றதாகும்.

1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. எஸ் ஆறுமுகம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் 2-1-82 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்ததுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டுவரை சேலம் மாவட்டம் திருச்செங்கோடு (செட்யூல்ட் வகுப்பு) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

2. வினாக்கள்—விடைகள்
உடுக்குறியிட்ட வினாக்கள்.

தீயணைப்புப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 74—திரு என். பழனிவேல்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீயணைக்கும் படையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் திட்டம் எந் நிலையில் உள்ளது?